**பாத்ததும்பற பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாத்ததும்பற பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாத்ததும்பற பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மோட்டார் வண்டிகள் மற்றும் வண்டில்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,640,000 குறைத்து நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,496,000 ஆ தளபாட உபகரணங்கள், தளபாடங்களின் கீழும் பொது களஞ்சிய இருப்புக்களின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டிற்காக பெறவேண்டிய நிலையான வைப்புக்கள் வட்டி ரூபா 1,565,730 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான பெக்கோ இயந்திர வருமானம் ரூபா 260,000 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 14 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கு இடையே ரூபா 21,337,156 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்களை இனங்கண்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய 07 பொது நூலகங்களின் பிணை வைப்பு மீதி ரூபா 231,860 ஐ உறுதிப் படுத்துவதற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் ஆவணங்களை சரியாக பேணிச் செல்லப்படும். | ஆவணங்கள் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 14,910,192 கூட்டுத் தொகையான 02 சொத்து மீதிகளுக்குரிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் அட்டவணைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 1646 | மீளாய்வாண்டிற்குரிய 20 வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | விரைவில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,529,254 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,269,675 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,793,650 | 7,398,528 | 7,771,493 | 4,967,208 | 5,768,686 | 7,490,268 | 11,712,568 | 5,340,173 |
| (ii) | வாடகை | 5,137,560 | 4,185,954 | 4,632,263 | 339,027 | 3,358,392 | 3,550,993 | 3,065,900 | 785,336 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,728,000 | 3,873,232 | 3,873,232 | - | 2,282,000 | 3,003,365 | 3,003,365 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 66,505,449 | 12,730,656 | 55,399,234 | 22,538,404 | 59,370,220 | 24,537,111 | 29,697,386 | 65,206,982 |
| | | 80,164,659 | 28,188,370 | 71,676,222 | 27,844,639 | 70,779,298 | 38,581,737 | 47,479,219 | 71,332,491 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 4,967,208 ஆக காணப்பட்ட துடன் அலகொன்றில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 195 ஆதனங்களில் ரூபா 1,792,345 ஆன வீதவரியை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடமாடும் சேவைகள் மூலம் வருமானம் சேகரிக்கப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி திருத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீடொன்ற விரைவில் பெற்றுக் கொள்ளப்படும் | முறையான ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 1,208,005 ஆக காணப்பட்டதுடன் அலகொன்றில் நீர்க் கட்டண நிலுவை ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 18 நீர் பாவனையாளர்களிடமிருந்து மொத்தம் ரூபா 157,276 ஆன நீர்க் கட்டணநிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடமாடும் சேவைகளை நடாத்ததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 74,667 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 17,472,284 ஆக இருந்தது. | நிலுவையைப் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நீதிமன்ற தண்டப் பணத்தையும் முத்திரைக் கட்டணங்களை பெற்றுக கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குண்டசாலை பிரதேச சபை மற்றும் பாத்தும்பர பிரதேச சபை ஒன்றிணைந்து செயற்படுத்தப்படுகின்ற யப்பான் தொழில்நட்ப வாயு தானியங்கி மற்றும் சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டில் இணக்கப்பாட்டு உடன்படிக்கை ஒன்றில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டிருந்ததுடன் 2022 யூலை மாதம் முதல் குண்டசாலை பிரதேச சபையால் உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உடன்படிக்கையை மீறுவதால் ஏற்படும் நிதி நட்டத்தை அறவிடுவதற்கோ அல்லது சிக்கலொன்று உருவாகும் போது செயற்படும் முறை பற்றி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | போதும் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 21 ஆந் திகதி வரரையிலும் இச்சிக்கல்கள் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 78(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது சுகாதார அதிகாரியாக சபை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபை அதிகாரப்பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் 05 நீர் செயற் திட்டங்களில் நீரின் மாதிரிகள் பரீட்சிக்கப்படாமல் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. | நீர் மாதிரிகளை வருடாந்தம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீர் மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டு சுத்தமான நீர் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 4,473,240 ஆக இருந்ததுடன் 1 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 3,749,238 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மொத்தம் ரூபா 724,002 ஆக இருந்தது. | உள்ளுராட்சிமன்ற அமைச்சினால் மீள் நிரப்பல் மேற் கொள்ளப்படவில்லையென | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டு:த்தொகை ரூபா 45,502,403 ஆக இருந்ததுடன் அதில் 03 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுரிய மீதிகளின் மொத்தம் ரூபா 1,859,473 ஆக இருந்ததுடன் மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மொத்தம் ரூபா 1,265,827 ஆக இருந்தது. | ஆராய்ந்து பார்த்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் இறுதி திகதியில் பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 215,570 ஆன இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் கீழ் காண்பிக்கப் பட்டிருந்தன. | பதிவேடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | ஆராய்ந்து பார்த்து தீர்வு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | மீயாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 62,790,706 ஆன காணி மற்றும் கட்டிடங்களுக்கான உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை. | உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரித்து கை யேற்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சபை பயன்படுத்தும் 02 வாகனங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை | உரித்தினை கையேற்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | - மேற்படி - |

**3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ரூபா 5,060,000 ஆன 04 வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 01 இயந்திரம் 06 முதல் 13 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் விளைவற்று காணப்பட்டன. | திருத்தம் செய்யப்படவோ அல்லது ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | திருத்தம் செய்வதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் காண்பிக்கப்படும் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 08 வருமான விடயங்களில் 18 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையிலும் 08 செலவின விடயங்களில் 08 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாத வகையில் தயாரித்துக் கொள்ளப்படும். | கவனமாகவும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீட்டில் ஒதுக்கீடு வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்த போதும் அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த நோக்கங்களை இயலுமான வரை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |